சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 06.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 11610/E/2024**

திருமதி.R.கஸ்தூரிபாய் (எ) கஸ்தூரி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
புரசைவாக்கம் வட்டம்,
சென்னை மாவட்டம்.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திருமதி.R.கஸ்தூரிபாய் (எ) கஸ்தூரி அவர்கள் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திருமதி.பார்கவி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், புரசைவாக்கம் வட்டம், சென்னை அவர்கள் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 20.05.2024 |
| **கோரிய தகவல்**, வாரிசு சான்றிதழ் கோரி 10.03.2024 முதல் 05.05.2025 வரை வரப்பெற்ற மொத்த மனுக்களின் எண்ணிக்கை, அதில் நான் அளித்த மனுவின் வரிசை எண் குறித்த விபரம் உள்ளிட்ட 13 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர், புரசைவாக்கம், சென்னை அவர்களுக்கு மனு செய்துள்ளார். | |

| | |
|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | ந.க.எண்.அ2/692/2024, நாள் 14.06.2024<br><br>ந.க.எண்.அ2/692/2024, நாள் 29.10.2025 |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 08.07.2024 |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | ---- |
| சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 02.09.2024 |

•••••

- பொதுத் தகவல் அலுவலர், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தங்கள் அலுவலக கடித ந.க.எண்.அ2/692/2024, நாள் 14.06.2024, ந.க.எண்.அ2/692/2024, நாள் 29.10.2025 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கிறார்.
- பொதுத் தகவல் அலுவலரின் வாதத்தின் மீதான எதிர் வாதத்தினை எடுத்துரைக்க மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை.
- எனவே, பொதுத் தகவல் அலுவலரின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், மனுதாரரின் 20.05.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவிற்கு, 14.06.2024, 29.10.2025 மற்றும் 02.07.2026 ஆகிய தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 11610/E/2024</u>**
**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
புரசைவாக்கம் வட்டம், சென்னை மாவட்டம் - 600 007.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**
திருமதி.R.கஸ்தூரிபாய் (எ) கஸ்தூரி, த/பெ.ராமசாமி,
19.12, லாடர்ஸ் கேட், மெயின் லைன்,
புரசைவாக்கம், சென்னை - 600 084.

Copy to: File MP/PA-